பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 19 சனிக்கிழமை (03-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 168

# கிளிநொச்சிக்கு உணவுப் பொருள் எடுத்துச் செல்வதற்குப் பெருமுயற்சி

## இரண்டு வாரத் தடங்கலை நீக்க உதவும் பணியில் செஞ்சிலுவை

வவுனியா, ஓகஸ்ட் 3

**கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு கடந்த இரண்டு வாரங்களாக, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவில்லை;**

**இந்தத் தடங்கல் நிலையை நீக்கும் முயற்சியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.**

உணவுப் பொருள்களை மேற்படி இரண்டு மாவட்டங்களுக்கும் அனுப்புவதற்கான ஏற்பாடு ஒன்றினைச் செய்யும் பொருட்டு —

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஓமந்தைக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர்.

செஞ்சிலுவை அதிகாரிகள் அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து உணவுப் பொருள் போக்குவரத்துக் குறித்துப் புதிய ஏற்பாடு ஒன்றுக்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

அதன் பலனாக உணவு லொறிகள் இன்று அல்லது நாளை வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்படலாம் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் —

வவுனியாவில் இருந்து செல்லும் உணவு லொறிகள் தாண்டிக் குளத்துக்கு அடுத்துள்ள சாந்தசோலையில் பொருள்களை இறக்கிவிட்டுத் திரும்ப வேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெடுங்கேணிப் பகுதிகளில் இருந்து நொச்சிமோட்டையைக் கடந்து சாந்தசோலைக்கு வரும் லொறிகள் இப்பொருள்களை ஏற்றிக் கொண்டு திரும்ப வேண்டும்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் இப்போது 118 லொறிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் செல்வதற்காகக் காத்து நிற்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டைப் பகுதியில் 41 தமிழர் கைதாகினர்

கொழும்பு, ஓக 3

கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 41 தமிழர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 18 பேர் பெண்கள்.

இவர்கள் 41 பேரும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு—கிழக்கு பகுதியிலிருந்து கொழும்பு வந்த இவர்கள்—

உண்மையிலேயே தமது சொந்த அலுவல்களுக்காக இங்கு வந்தார்களா—

அல்லது விடுதலைப் புலிகளுக்கு உளவு வேலை பார்ப்பதற்காக வந்தார்களா— என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சம்பந்தப்பட்டவர்கள் உண்மையிலேயே தங்கள் சொந்த அலுவல்களுக்காகக் கொழும்பு வந்திருந்தால் அவர்கள் விடுவிக்கப்படுவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நீடிக்கும் எண்ணம் இல்லை

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

இந்த யுத்தத்தை நீடித்துக் கொண்டு போகும் எண்ணம் அரசுக்கு இல்லை. வெகு விரைவில் யுத்தத்துக்கு முடிவு காணப்படும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்காக வரவு - செலவுத் திட்டத்தில் 3 ஆயிரத்து 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இனிவரும் வரவு - செலவுத் திட்டத்தில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-3)

## கிளிநொச்சியில் இடம்பெயர்ந்தோர் வீதி ஓரங்களிலும் மரநிழல்களிலும்

கொழும்பு, ஓக. 3

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வீதி ஓரங்களிலும், மரநிழல்களிலும் வாழும் பல்லாயிரக் கணக்கான மக்களின் கதி குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் குடிதண்ணீர் வசதி கூட இல்லாத நிலை, பெரும் மனித உயிரிழப்பை ஏற்படுத்தலாம் என்றும்—

சாதாரண மக்களின் நிலை குறித்து கவலையாக இருக்கிறது என்றும் — செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி மார்க்கோ வெல் ரோய்ட்டருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ-3)

## நிலாவெளியில் 2 படையினர் பலி

கொழும்பு, ஓக. 3

திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு ராணுவ சிப்பாயும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## டீசல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 3

வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு டீசல் வழங்கும் பணி பிரதேச செயலகங்களில் ஆரம்பமாகியுள்ளது.

பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் மூன்று படிவங்களை நிரப்பி மீளவும் பிரதேச செயலகங்களில் கையளிக்க வேண்டும் என்றும் —

பிரிக்கேட் அலுவலக அனுமதி கிடைத்ததும் எரிபொருள் நிலையங்களில் மாதாந்த கோட்டாவுக்கான டீசலைப் பெறமுடியும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படிவங்கள் வழங்கும் பணி தற்போது பிரதேச செயலகங்களில் ஆரம்பமாகி உள்ளது. (இ-3)

## உணவுப் பொருள்களுடன் தவக்கும் கிடக்கும் லொறிகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் சுமார் 118 லொறிகள் தாண்டிக்குளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நிலை குறித்த அரசின் அறிவிப்பு வந்ததும் இந்த லொறிகள் கிளிநொச்சிப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படும் என்று வவுனியாவைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)

## கண்ணி வெடிகளை அகற்றும் படையினர்

கொழும்பு, ஓக. 3

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தொடர்ந்து பரந்தனில் நிலை கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது நிலைகளைப் பலப்படுத்தும் படையினர் கண்ணி வெடிகளையும், மிதி வெடிகளையும் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

எந்நேரமும் அவர்கள் கிளிநொச்சி நகர் மீதான தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## இலங்கை நோக்கி வரும் புலிகளின் ஆயுதக் கப்பல்?

### கடற்படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, ஓக. 3

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று இலங்கையை நோக்கி வருவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக ''லங்காதீப'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

''பாரிஸ்'' என்ற இந்தக் கப்பல் தொடர்பான தகவல்களை அரசின் பாதுகாப்புத் துறையே கடற்படையினருக்கு வழங்கியது என்றும் —

இந்தக் கப்பல் மத்திய கிழக்குத் துறைமுகமொன்றிலிருந்து ஜூன் 5 ஆம் திகதி புறப்பட்டது என்றும்—

கப்பல் கடந்த ஜூன்மாதம் 20 ஆம் திகதியளவில்

(6ஆம்பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் பதிப்பகம் தற்போது கே. கே. எஸ். வீதியில் அமைந்துள்ள சங்க தலைமையலுவலக கட்டடத்தில் இயங்கி வருகிறது தங்களது அச்சகத் தேவைகள் எதுவானாலும் மிகவும் நியாய கட்டணத்தில் நிறைவேற்ற தொடர்பு கொள்ளுங்கள்.

## கூட்டுறவுப் பதிப்பகம்

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் — வ.து
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2703)

---

## மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள்

3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆம் ஆண்டுகள்
**O/L** - எல்லாப் பாடங்களுக்குமான
**A/L** - கணித - உயிரியல் - கலை - வர்த்தக பிரிவு - எல்லாப் பாடங்களுக்குமான
மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள்

**05 - 08 - 1996** முதல்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

(42096)

---

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

28 – 07 - 96 இல் நடைபெறவிருந்து, பிற்போடப்பட்ட மேற்படி கூட்டம் 04 - 08 96 ஞாயிறு மாலை 3. 30 மணியளவில் கல்லூரி நூல்நிலையத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற இருப்பதால் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

செல்லையா வேதராசா
செயலாளர்.

கல்லூரி வீதி,
மானிப்பாய்.

(42097)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்:
8–4–1959
[இலங்கை]

இறைவன் அடியில்:
26–7–1994
(சுவிஸ்)

### அமரர் சபாபதி மதனராஜ்

திதி 3 – 8 – 1996

ஐயா! உற்றார், உறவினர், நண்பர்கள் உம்மைத் தேடுகின்றார்கள். மகனே! உமது தாய், தந்தை, மைத்துனர், சகோதரி, மருமக்கள், மனைவி, பிள்ளைகளை மானத்தோடு வாழவைத்த மாயவனே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கிறோம்.

தகவல்:
திரு சபாபதி குடும்பம்

டச்றோட்,
சாவகச்சேரி.

(41760)

---

## கிறிஸ்தவ ஒன்றிய கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. இன்று சனிக்கிழமை இக் கூட்டம் நடைபெற இருந்தது தெரிந்ததே. (இ-4)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

வெற்றிடம் நிரப்பும் பட்டியல்

### கல்வியாண்டு 1995|1996

விவசாய விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளிற்கான வெற்றிடம் நிரப்பும் பட்டியல்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்பட்டியல்களைப் பரீட்சைகள் அனுமதிகள் கிளையிலுள்ள விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். மேற்குறிக்கப்பட்ட பாடநெறிகளிற்கு தெரிவானவர்கள் கீழே தரப்பட்ட ஆவணங்களுடன் பரீட்சைகள் அனுமதிகள் கிளையில் தங்களது பெயர்களை 1996 - 08 - 16 —க்கு முன்னராகப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அனுப்பி வைக்கப்பட்ட அனுமதிக்கடிதம்.
2. தேசிய அடையாள அட்டை.
3. புகைப்படம் (8 பிரதிகள் 2'' × 2½'').
4. பிறப்புச்சான்றிதழ் (மூலப்பிரதி, நிழற்படப்பிரதி)
5. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதி, நிழற்படப்பிரதி)
6. பல்கலைக் கழக காசாளரின் கருமபீடத்தில் ரூபா 305/- செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு.

–பதிவாளர்

(சி-2709)

---

## அறிவித்தல்

### குகன் ஸ்ருடியோ ஸ்தாபனம்

பொது மக்கள் வசதி கருதி 2ஆம் குறுக்குத் தெருவில் பருத்தித்துறை தபால் கந்தோருக்கு கிழக்கு முகமாக போகும் றோட்டில் 31-7-96 இல் இடம் மாறியுள்ளது.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(42104)

---

## அறிவு கல்வி நிலையம்

(இராசாவளவு)

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

### கல்வி ஆண்டு 1996

ஆண்டு **5 — 11** வரையிலான வகுப்புகள்
ஆரம்பம் **12-08-96** திங்கள் 3 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணிதம் | — திரு. உதயன் |
| விஞ்ஞானம் | — திரு. லிங்கன் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — செல்வி. கலைச்செல்வி |
| தமிழ், சமயம் | திரு திருச்செல்வம் |
| வர்த்தகம் | — பிரபல ஆசிரியர் |
| ஆங்கிலம் | — திரு. சண்முகதாசன் |

### A/L 97, 98
### கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம் **21 — 08 — 96**

மாணவர் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டுள்ளதால் அனுமதிகளை 05 — 08 — 96 முதல் பெற்றுக் கொள்ளவும்.

— முதல்வர்

(42105)

---

## கண்ணீர் அஞ்சலி

பூவுலகில்: 29 – 04 – 1976

விண்ணுலகில்: 04 – 07 – 1996

### சுகந்தன் நவரட்ணசிங்கம்

(மாணவன், பரி. யோவான் கல்லூரி)

அன்பிலே உன் ஞானத்தாய்
உறவிலே அன்பு மைத்துனியாய்
உன் இளமையின் வளர்ச்சி கண்டு
எமக்குள்ளே பெருமைகொண்டோம்
கொடுத்தவன் உன்னை
எடுத்துக்கொண்டான், என்செய்வோம்!
கலங்குகின்றோம், தவிக்கின்றோம்
மாதமொன்று மறைந்தபோதும்
மாறாதையா உன் நினைவு.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
டென்மார்க்கிலுள்ள மச்சாள் குடும்பத்தினர்
A. ஜோசப் & யோகமாலா

(42108)

---

31 ஆம் நாள்

## நினைவுப் பூக்கள்

தோற்றம்: 10 – 08 – 1977

மறைவு: 04 – 07 – 1996

செல்வன்

### கதிர்காமநாதன் குலேந்திரன்

(யாழ். இந்து உயர்தர கணிதப்பிரிவு மாணவன்)

நண்பா!

சொற்களால் ஆறக் கூடியதா
உன் பிரிவுத் தீ
உன் நினைவுப் பூக்களை
நெஞ்சில் ஏந்தி நிற்கின்றோம்:

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
இந்துவின் மைந்தர்கள்.

(42019)

---

## A/L 98 ஆரம்பம்: 4 - 8 - 96 காலை 8 மணி

### கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் | — சண் |
| கணக்கியல் | — சதீஸ் |
| அளவையியல் | — R. P. சர்மா |
| தமிழ் | — அருந்தவநாதன், ஆர்த்திகன் |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | அருள்நங்கை |
| கிறிஸ்தவம் | — வசந்தன் |
| வர்த்தகம் | — தேவா, ரட்ணம் |
| புள்ளிவிவரவியல் | — குணம் |
| புவியியல் | — குணராசா |
| வரலாறு | — ஆனந்தன் |
| அரசியல் | — கியூபேட் |
| நாடகமும்-அரங்கியலும் | — குழந்தை சண்முகலிங்கம் |

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி
அருள் நங்கை

(42100)

# சோமாலிய கிளர்ச்சிக் குழுவின் தலைவர் மொகமட் ஜடீட் மரணம்

மொகடிஸோ, ஒக. 3

சோமாலியாவின் பிரதான கிளர்ச்சிக் குழுவின் தலைவர் ஜெனரல் முஹம்மத் பரா ஐடீட் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக மரணமானார்.

சமீபத்தில் போட்டிக்குழு ஒன்றுடன் நடைபெற்ற சண்டை ஒன்றில் அவர் காயம் அடைந்திருந்தார் என்றும்—

தலைநகர் மொகடிஸோவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட சமயம் அவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாஷிங்டனில் உள்ள ஜெனரல் ஐடீட்டின் உதவியாளர் ஒருவர் அவரின் மரணத்தை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

1993 இல் சோமாலியாவில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் போட்டிக்குழுக்கள் மத்தியில் நடைபெற்ற மோதல்களில் ஐடீட் தலைமையிலான குழுவே பிரதான குழுவாக இருந்து வந்தது.

சோமாலியாவில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக முதலில் அனுப்பப்பட்ட அமெரிக்கப்படையையும், பின்னர் அனுப்பப்பட்ட ஐ. நா சமாதானப்படையையும் ஐடீட் தலைமையிலான குழு தெரிவித்தது.

ஐடீட் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவினர் நடத்திய தாக்குதல்கள் காரணமாக அமெரிக்கப்படையினர் சிலரும், அதன் பின்னர் வந்த ஐ.நா. படையினர் சிலரும் கொல்லப்பட்டனர்.

இந்த தொடர் தாக்குதல்களே ஐ.நா. சமாதானப் படை இறுதியில் சோமாலியாவில் இருந்து வெளியேறக் காரணமாக இருந்தது.

ஜெனரல் ஐடீட்டின் மரணத்தை அடுத்து சோமாலியாவின் எதிர் காலம் கேள்விக்குறியாக மாறிவிட்டது என்றும்—

சமாதான முயற்சிகள் கை கூடாமல் போகலாம் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-3)

## விபசாரிகள் கூட்டத்தில் அமைச்சர்

புதுடில்லி, ஒக. 3

துன்ப வாழ்க்கையிலிருந்து மீளவும்—

தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்காகப் போராடவும்— சொந்தமாக சங்கம் அமைக்கப் போவதாக இந்திய விபசாரிகள் அறிவித்துள்ளனர்.

விபசாரத்தில் ஈடுபடும் பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் புதுடில்லியில் நடைபெற்றபோது அதில் மத்திய அமைச்சர் காந்தி சிங்கும் கலந்து கொண்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான விபசாரிகளும் கலந்து கொண்டனர். (இ)

அணு ஆயுத தடை ஒப்பந்தம்:

## இந்தியா - பாகிஸ்தான் கையெழுத்திட மறுப்பு

இஸ்லாமாபாத், ஒக. 3

விரிவான அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்றால் பாகிஸ்தானும் கையெழுத்திடாது.

இப்படிப் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ அறிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான இறுதிக் கட்டப் பேச்சுக்கள் ஜெனிவா நகரில் நடைபெற்றுவரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இப்போதுள்ள ஒப்பந்தத்தின் சரத்துப்படி தாம் கையெழுத்திடப் போவதில்லை என்று இந்தியா உறுதிபடக் கூறியுள்ளது. (இ-3)

## அமெரிக்கத் தூதர் காஷ்மீர் விஜயம்

### தீர்வு ஏற்படுத்த முயற்சி

ஸ்ரீநகர், ஒக. 3

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட ஜம்முகாஷ்மீரில் உள்ள முக்கிய பிரிவினைவாத அமைப்புக்களுடனும், மற்றும் அங்குள்ள அலுவலர்களுடனும், பத்திரிகையாளர்களுடனும் கலந்தாலோசிப்பதற்காக இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் பிராங் வைஸ்னர் அங்கு சென்றுள்ளார்.

காஷ்மீர் பிரிவினை வாதிகளின் அனைத்துக் கட்சி கூட்டமைப்பின் மூத்த தலைவரான ஷபிர் ஷாவுடன் அவர் பேச்சுக்களை நடத்தி முடித்துள்ளார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் மக்களின் விருப்பங்களை கருத்தில் எடுத்து ஒரு புரிந்துணர்வுக்கு வராமல் காஷ்மீரில் அமைதி ஏற்பட முடியாது என அவர் அச்சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்தார்.

காஷ்மீரில் நீண்ட காலமாக தொடரும் நெருக்கடியைத் தீர்ப்பதில் அமெரிக்கா பங்கேற்க வேண்டும் என்று பிரிவினை வாதத் தலைவர்கள் எதிர் பார்ப்பதால் அவர்களுக்கு இந்த விஜயம் முக்கியமானது என்று கருதப்படுகிறது. (இ-3)

## உலக அரங்கில்

## குமரிஅனந்தன் தொடர்ந்து தலைமைப் பதவி

சென்னை, ஒக. 3

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக திரு. குமரி அனந்தனே தொடர்ந்து நீடிப்பார் என அகில இந்திய காங்கிரஸ் தலைமை அறிவித்திருக்கின்றது.

அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்தனன் பூஜாரி புதுடில்லியில் நேற்று முன்தினம் இந்த அறிவிப்பை விடுத்தார். (இ-3)

## காஷ்மீர்ப்பகுதியில் மீண்டும் தாக்குதல் அதிகரிப்பு

காஷ்மீர் மாநிலத்தில் சமீப நாள்களாக தீவிரவாதச் செயல்களின் வேகம் அதிகரித்துள்ளது.

ஜனநாயக முறையில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறுவதைச் சீர்குலைக்கவே தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகப் பிரதமர் தேவகௌடா தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலத்தில் சக்கபின் என்னும் பிரபல பத்திரிகையாளர் நேற்று தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார். (இ-3)

## அல்ஜீரியாவில் குண்டுத் தாக்குதல் கத்தோலிக்க பிஷப் கொல்லப்பட்டார்

மேற்கு அல்ஜீரியாவில் நேற்று இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் றோமன் கத்தோலிக்க பிஷப் ஒருவர் கொல்லப்பட்டார்.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவரான அவர் தமது வீட்டில் இருந்த சமயம் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை ''காட்டுமிராண்டித் தனமான செயல்'' என்று அல்ஜீரிய உள்துறை அமைச்சர் கண்டித்துள்ளார்.

அல்ஜீரியாவில் ஆட்சியைப் பிடிப்பதற்கு போராடிக் கொண்டிருக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குறித்து பிரஸ்தாப பிஷப் கண்டனம் தெரிவித்து வந்தார் என்றும்—

கடந்த மார்ச் மாதம் இந்த அடிப்படை வாதிகளால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட 7 பிரெஞ்சுக் காரர்களின் நினைவுக் கொண்டாட்டத்துக்காக அல்ஜீரியா வந்த பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சருடன் சேர்ந்து பிஷப் நினைவுக் கொண்டாட்டங்களை நடத்தினார் என்றும்—

அதன் பின்னரே குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானார் என்றும் — பி. பி. ஸி குறிப்பிட்டது.

அல்ஜீரியாவில் உள்ள முஸ்லிம் அல்லாதவர்களும், வெளிநாட்டவர்களும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் இலக்கு என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பற்களை இழந்தவருக்கு ரூ. 40 கோடி நஷ்டஈடு!

வாஷிங்டன், ஒக. 3

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 40 கோடி ரூபா நஷ்டஈடு கிடைக்க உள்ளது.

லிண்டா ஜிப்ரி என்ற இந்தப்பெண் தனது பற்களில் ஏற்பட்ட நோய் காரணமாக பல் மருத்துவரிடம் சென்றார்.

பல் மருத்துவர் எல்லாப் பற்களையும் பிடுங்குவது தான் ஒரேவழி எனக்கூறி அனைத்தையும் எடுத்தும் விட்டாராம்.

அவசியம் இன்றி 24 பற்களையும் மருத்துவர் அகற்றிவிட்டதாக குற்றம்சாட்டி அந்தப் பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்தப் பெண்ணுக்கு 40 கோடி ரூபா நஷ்டஈடு வழங்கும்படி மருத்துவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ-3)

## இந்தியாவிலிருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு முடிவு

### பிரிமா ஆலை உற்பத்தி போதுமானது அல்ல

இந்தியாவில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக வாணிப அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதையடுத்து இந்தியாவிடம் ஒரு லட்சம் மெற்றிக் தொன் கோதுமை மாவுக்கான கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு திருகோணமலையில் பிரிமா ஆலை ஆரம்பிக்கப்பட்டது.

கோதுமையை இறக்குமதி செய்து அதை மாவாக தயாரிப்பதற்கு இந்த ஆலைக்கு பூரண அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும், பாவனையாளரின் தேவை அதிகரித்துள்ளதையடுத்து மாவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யமுடிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மாநகரசபைப் பகுதியில்

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போட ஏற்பாடு

யாழ். மாநகரசபைப் பகுதியில் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து போடப்பட உள்ளது.

தடுப்பூசி போடப்படும் இடங்கள், நேரம்வருமாறு:—

7ஆம் திகதி புதன் கிழமை காலை 8.00 முதல் 2.30 வரை- கால்நடை வைத்தியர் பணிமனை.

(நாவலர் வீதி - பிறவுண் வீதி-)

8ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.00 முதல் 2.30- வரை கால்நடை வைத்தியர் பணிமனை.

(நாவலர் வீதி - பிறவுண் வீதி-)

9ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.00 முதல் 2.30 வரை- வண்ணார் பண்ணை காமாட்சி சனசமூக- நிலையம்.

(கஸ்டிச் சந்தி பாதுகாப்பு நிலையம் ஊடாகச் செல்ல வேண்டும்). (இ)

மட்டுவிலில் இப்படியும் நடக்கிறது:

## தண்ணீர்தாங்கி மேடையை பிரித்து மண் எடுக்கின்றனர்

சாவகச்சேரி, ஒக. 3

வலிகாமம் பகுதி மக்கள் இடம் பெயர்ந்திருந்த காலத்தில் அவர்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன், அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி மேடைகளில் ஒன்று பிரிக்கப்பட்டு அந்த மேடைக்குப் போடப்பட்டிருந்த பெருமளவு மண் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்படுகின்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது :

வலிகாமம் பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியிருந்த வேளை மட்டுவில், கல்வயல், நுணாவில் பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவியது.

இதனை அவசரமாக நிவர்த்தி செய்வதற்காக யாழ். மாநகரசபையும், சாவகச்சேரி நகரசபையும் இணைந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் மட்டுவில் கிராமத்தில் ஹோர்து மாதா ஆலய வளவிலும், நுணாவிலில், சந்திக்கருகில் உள்ள தேவாலயம் ஒன்றிலும் குடிதண்ணீர்த் தாங்கிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப மேற்படி இடங்களில் சுமார் 4 அடி உயரமும், 25 அடி நீளமும் கொண்ட மண்ணாலான மேடைகள் அமைக்கப்பட்டன.

இவற்றில் மட்டுவிலில் அமைக்கப்பட்ட மேடையே தற்போது பொது மக்களால் பிரிக்கப்பட்டு அம்மேடைக்குப் போடப்பட்டிருந்த பெருமளவு மணல் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்படுகின்றதாம். (இ-31)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

உயர் குலத்தவரான 25 வயதினரான யாழ் நகர பிரபல கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றும் கத்தோலிக்க மாதுக்கு ஆசிரியராக அல்லது வங்கி, கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் மணமகன் தேவை, தொடர்பு: மே/பா. 510, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

(42087)

### தவறிவிட்டது

செல்வர் மகேந்திரன் ஆகிய எனது 492142972 V இலக்கம் கொண்ட அலுவலக அடையாள அட்டை 27 - 7 - 96 அன்று தட்டாதெரு சந்திக்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 7, பென்ரிக் கோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(42090)

குலேந்திரன் கவிதா (சித்தன்கேணி) ஆகிய எனது 768171041 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 24 - 07 - 96 அன்று யாழ். பஸ் நிலையத்துக்கும், யாழ். வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 270, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எயிட் - லைன்ஸ் (றோயல் டிஸ்பென்ஸரி) இல் ஒப்படைக்கவும்.

(42092)

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் (வைற் கவுஸ் அருகில்) 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(41870)

### தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்) வகுப்புக்கள் மீண்டும் நடைபெறுகின்றன. தொடர்பு:- ஆசிரியை, தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

(41768)

### A/L பௌதிகவியல்

அனுபவம் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் பயிற்சிகளோடு சிறப்பாகக் கற்பிக்கப்படும். (தனிப்பட்ட முறையிலும்) R.பாலசுப்பிரமணியம் B. Sc (Cey) Dip - in - Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(42012)

### விற்பனைக்கு

நல்ல இன சாணன் ஆடு[illegible] ள் விற்பனைக்கு உ[illegible] டு. தொடர்பு:- வர்ணக் [illegible] காலணிப் பூங்கா, இல- 3, கண்டி றோட், சாகச்சேரி.

(சி/2705)

## A/L 98

## கலை, வர்த்தகம்

ஆரம்பம் : 04— 08— 96

8- 00 மணி

குறிப்பு:

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

நிர்வாகி :S: அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்.

(42014)

### EASY ENGLISH

ஆங்கிலத்தை இலகுவில் கற்கவும், சற்பிக்கவும் T. M. அன்ரனிப்பிள்ளை அவர்கள் எழுதிய Easy English 5 தொகுப்புகள் அடங்கிய நூல் எம்மிடம் விற்பனையாகிறது. கிடைக்குமிடம்: மக்மிலன் புத்தகசாலை, இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(42089)

### ஆங்கிலப் பரீட்சைகள்

G.A Q., University, ஆங்கில ஆசிரியர் தேர்வு, O/L Distinction, Credit பெறுபேறடைய கற்பிக்கப்படும். B.Sc London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.

(41777)

### மேர்வின்ஸ்

றபர் சீல்கள், பிளாஸ்ரிக் போர்ட்டுகள், பாடசாலைச் சின்னங்கள், டேற் ஸ்ராம்புகள் செய்யும் மேற்படி எமது ஸ்தாபனம் தற்போது பழைய இடமான, கீழ் குறிக்கப்பட்ட விலாசத்தில் இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம் 91/1, மின்சார நிலைய வீதி, புதிய மார்க்கட் முன்பாக (மேல் மாடி), யாழ்ப்பாணம்.

(42082)

### புலமைப் பரிசில் 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. அடுத்த (11 வது) வெளியீடு: 04 - 08 - 96. BOND, INSTITUTES, 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(42093)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## NOTICE

## FACULTY OF MEDICINE

Academic Programme of the Faculty of Medicine, University of Jaffna commenced on 15th July 1996 All students are requested to attend the Academic Programme at the Faculty of Medicine, University of Jaffna immediately.

Registar. (C/2708)

## நல்லூர் பிரதேசத்தில்

விடியும் வேளை

## "உதயன்"

நாளிதழை வீடுகளில் பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்க:

**ஏ.எம்.ஆர். ஸ்தாபனம்,**

186, கோயில் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 98

**கலை வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்**

**03 - - 08 – 96** (சனி)

வழமையான ஆசிரியர் குழு

– நிர்வாகி

(சி)-2692)

## விஜனா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தகம் 98

ஆரம்பம்: **04-08-96**

காலை 9 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு. தரன் |
| கணக்கியல் | — | திரு சில்வஸ்தர் |
| அளவையியல் | — | திரு. யுகபாலசிங்கம் |
| புள்ளிவிவரவியல் | — | திரு. திரிகரன் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| தமிழ் | — | திரு. திருஞானம் |
| அரசியல் | — | திரு. சீலன் |
| வரலாறு | — | திரு. கோபி |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. சத்தியா |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(41754)

சாவகச்சேரி

அருள்மிகு

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மகோற்சவ விழா அழைப்பு

அன்புடையீர்!

கொடியேற்றம் **4-8-96** ஞாயிறு முற்பகல் 10 மணி
வேட்டைத் திருவிழா: **10-8-96** சனி பி பகல் 2மணி
சித்திரத் தேர்: **12-8-96** திங்கள் மு.பகல் 10 மணி
தீர்த்தத் திருவிழா: **13-8-96** செவ்வாய் மு. பகல் 9 மணி
பூங்காவனம்: **14-8-96** புதன் பி. பகல் 3 மணி

மேற்குறித்த நிகழ்ச்சிகள் யாவும் பழைய நேரப்படியே நடைபெறும்.

விரதம் அனுட்டிப்போர் கொடியேற்றத்தன்று நேரத்துக்கே பெயர்களைப் பதிவுசெய்து சங்கற்பம் செய்து கொள்ளவும்.

தூர இருந்து வரும் அடியார்கள் வசதி கருதி திருக்கதவு பகல்பூராவும் திறந்து இருக்கும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்:
ப. மகாகணபதி சர்மா
(தர்மகர்த்தா)

(41972)

## இரண்டாவது

## பிறந்த தின வாழ்த்து

## ★ ஜெயக்காந்தன் ஜெயலதன் ★

சங்கானை பாரதி வீதியைச்சேர்ந்த ஜெயககாந்தன் சிறிலதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெயலதன் 03 – 08 - 1996 இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை சங்கானை பாரதி வீதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, ஜேர்மனியில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, பெரியத்தை, மாமா, சின்னத்தை, சின்னமாமா, பெரியமாமா, பெரியத்தை, கொழும்பில் உள்ள ஆசை மாமா, ஆசை அத்தை, இந்தியாவில் உள்ள சின்னமாமா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சின்னமாமா, மச்சான்மார், மச்சான் மார், அண்ணா மார், அக்கா மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

இ. ஜெயக்காந்தன்

பாரதி வீதி, சங்கானை.

(சி/2707)

## இசுசு லொறிக்குப் பொடி அடிப்பதற்கான

## கூறு விலைகள்

சங்கத்தின் **24/9364** இலக்க லொறிக்கு பொனெற், மட்காட் என்பவற்றைப் புதிதாக தகரவேலை செய்து பொருத்துவதற்கும், பொடி அடிப்பதற்கும் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறு விலைகள், (பாவிக்கப்பட உள்ள பொருள்களுக்கும், கூலிக்கும் தனித்தனியாக) **10 - 08 - 96** – க்கு முன் கோரப்படுகின்றன.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(C/2706)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அரும்பு: **02 — 08 — 1959**



உதிர்வு: **04 — 07 — 1996**

## அமரர் கனகு இராசரத்தினம்

(ஓட்டோ ஓட்டுனர், யாழ். பல்கலைக்கழகம்)

ஆலயப்பணியில் அடியவர்கள் உம் கைவண்ணம் கண்டு மேலும் காணவிழைந்தனர். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாகக் காலன் தன் கைவண்ணத்தைக் காட்டிவிட்டான். உம்பிரிவால் உமது குடும்பமும், தொண்டர் குலமாகிய நாமும் மிக வருந்துகின்றோம். உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்;
ஸ்ரீவல்லிபுரநாதர் தொண்டர் குலம்

நாராயண வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(41781)

உதயன்

## வதந்திப் பாவம்

வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராக அவசர காலச்சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனை விதிக்கப்படும்— என்று பொலீஸார் கொழும்பில் அறிவித்திருக்கிறார்கள்.

தெகிவளையில் நடைபெற்ற ரயில் குண்டு வெடிப்பின் பின்னர், தென்னிலங்கையில் வதந்திகள் கண்ட கண்ட மாதிரிப் பரப்பப்பட்டு மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்றமும் அச்சமும் உண்டாக்கப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்தே பொலீஸார் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். வதந்திகள், தேவையற்ற குழப்பங்களையும், சமூகக் கெடுதல்களையும் விளைவிப்பன. பல்வேறு நோக்கங்களுக்காகவும், காரணங்களுக்காகவும் தீய சக்திகளே வதந்திகளை இயற்றி விடுவதுண்டு.

கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரித்து அறிவதே மெய் என்பது தமிழில் உள்ள முதுமொழி வாசகம். ஆனால் நம்மில் பலரும் அதனை மறந்து, ஒருவர் சொல்வதைக் கேட்டு, நம்பி அதனைப் பிறர் நம்பக்கூடியதாகச் சொல்லி வதந்தி பரப்புகிறோம்.

இதனால் வதந்தியைப்பரப்பியவரின் நோக்கம் ஈடேறுவது மட்டுமன்றி, அவர் ''கட்டிவிட்டதை'' விடப் பல மடங்கு படுபயங்கரப் பொய்யாகவும் பெருத்துப் பருத்து விடுகிறது அது. அந்தப் பயங்கரத்தின் கொடிய விளைவுக்கு நாங்களும் எம்மை அறியாமலே, நோக்கம் கொள்ளாமலே, பங்காளிகளாகி விடுகிறோம்!

இதனை உணராமலே, சமூகத்துக்கு நாம் செய்யும் விரோதத்தை உணர்ந்து கொள்ளாமலே, ஒருவர் சொல்வதைக் கேட்டு, அதனைக் காவிச் சென்று மற்றவர் காதில் போட்டுவிடுகிறோம்.

வள்ளுவப் பெருமான் கூறிய 'யாகாவாராயினும் நாகாக்க' என்ற புத்திமதியை மறந்து, பிறருக்குத் தீங்கு செய்யும், கஷ்டம் தரும், மக்கள் மத்தியில் வேண்டாத விதத்தில் குழப்பத்தை உண்டாக்கும் பாவத்தைச் செய்கிறோம்.

போர்க் காலத்தில் மட்டுமன்றி, நெருக்கடியான வேளைகளில் மட்டுமன்றி, சாதாரண காலங்களில் கூட வதந்திகள் மக்களின் எதிரிகளாகவும், தொல்லை கொடுப்பவைகளாகவும், சில வேளைகளில் உயிர்க் கொல்லிகளாகவும் மாறி விடுவதுண்டு.

யாழ்ப்பாணத்தில் எப்போதுமே வதந்திகளுக்குக் குறைவில்லை; அவை விளைவிக்கும் சமூகக் கெடுதல்களுக்கும் பாதிப்புக்களுக்கும் தட்டுப்பாடும் இல்லை. அரசியல், நிர்வாக, வர்த்தக, தனிப்பட்ட விவகாரங்களில் எப்போதும் எத்தனையோ வதந்திகள் அங்குமிங்கும் நடமாட விடப்படுகின்றன.

உனக்கு உண்மை எனத் தெரியாததை மற்றவர் நம்பும் விதத்தில் கூறி மோசடி செய்யாதே என்ற புத்திமதியை, அடுத்தவருக்கு வதந்தி பரப்பும் போது — ஞாபகப்படுத்திக் கொள்ள மக்கள் பழகிக்கொள்ள வேண்டும். வதந்தி பரப்பிப் பாவத்தைத் தேடிக் கொள்ளாமல் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

# தமிழ் கட்சிகள் – முஸ்லிம் காங்கிரஸ் ஐ. தே. கவுடன் மீண்டும் பேச்சு

### கருத்து முரண்பாடுகளை நீக்க முயற்சி

கொழும்பு, ஓக. 3

வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் குறித்தும்—

அரசின் தீர்வுத்திட்டத்தில் உள்ள யோசனைகள் குறித்தும்— நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியும் இணைந்து எதிர்க்கட்சியான ஐ. தே. கவுடன் விரிவான பேச்சுக்களை எதிர்வரும் 9ஆம் திகதி நடத்தவுள்ளன.

இப்பேச்சின் போது அதிகாரப் பகிர்வின் அளவு சம்பந்தமாக விரிவாகப் பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை— நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வெளியே அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக கட்சிகளிடையே உத்தியோகப் பற்றற்ற முறையிலான பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. (இ-3)

## இழுவை கப்பலை இந்தியா கைப்பற்றியது

கொழும்பு, ஓக. 3

இந்தியக் கடற்பகுதிக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த இழுவைக் கப்பல் ஒன்றை இந்தியக் கரையோரக் கப்பலான ''தமறா'' கைப்பற்றியுள்ளது.

இந்த இழுவைப் படகில் இருந்த ஐந்து இலங்கை மீனவர்களும் இந்திய மீன் பிடித் துறைமுகமான கொச்சினுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (இ-3)

## கொழும்பு நகரில் உள்ள 20 ஆயிரம் பிச்சைக்காரர்

### பதிவு செய்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக 3

கொழும்பு மாநகரைச் சுத்தமாக வைத்திருக்கும் மாநகர சபையின் திட்டத்தின் ஒரு கட்டமாக, நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பிச்சைக் காரர்கள், மாநகரசபை அதிகாரிகளால் பதிவு செய்யப்படவுள்ளனர்.

இத்திட்டம் விரைவில் அமுலாக்கப் படுவதன் மூலம் நகரில் பிச்சைக்காரர்களினால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும் என்று மாநகர முதல்வர் கே கணேசலிங்கம் தெரிவித்தார்.

மாநகரசபை எல்லைக்குள் உள்ள சுமார் 20 ஆயிரம் பிச்சைக்காரர்களுக்கு, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் செல்வந்தர்களிடம் இருந்து பெறப்படும் நிதியில் இருந்து உதவி வழங்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சுற்றுலாத் தொழில் துறை: மொத்த விற்பனை வரியை ஜனாதிபதி நீக்கினார்

சுற்றுலாத் தொழில் துறையின் வெளிநாட்டு நாணய மாற்று சம்பாத்தியம் மீதான மொத்த விற்பனை வரியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாக நீக்கியுள்ளார்

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் சிபார்சை ஏற்று ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

உல்லாசப்பிரயாண ஹோட்டல் அறைகளை வாடகைக்கு விடுவதன் மூலம் பெறப்படும் வருமானம் மீதான 6 சதவீத மொத்த விற்பனை வரி, உணவு மற்றும் குடிபான விற்பனை மீதான 10 சதவீத மொத்த விற்பனை வரி, பிரயாண முகவர்களுக்கான 6சதவீத மொத்தவிற்பனை வரி ஆகியன நீக்கப்பட்டமை சுற்றுலாத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் என்று உல்லாசப் பயணச்சபைத் தலைவர் சமரநாயக்க தெரிவித்தார்.

## பதில் அரச அதிபராக வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். மாவட்டத்தின் பதில் அரச அதிபராக திரு. து. வைத்திலிங்கம் கடந்த புதன் கிழமை முதல் பணியாற்றி வருகின்றார்.

அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் கொழும்பு சென்றுள்ளார். (இ-3)

# மாடுகளுக்குக் கருங்கால் நோய்; தடுப்பூசி ஏற்றுமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஓக 3

கரவெட்டி, கரணவாய், உடுப்பிட்டி, தொண்டமானாறு ஆகிய இடங்களில் மாடுகளுக்கு கருங்கால் நோய் பரவிவருகிறது.

பருத்தித்துறை கால்நடை வைத்தியர் டாக்டர் திருமதி பீ. தங்கராசா எடுத்த துரித நடவடிக்கையால் தடுப்பூசி மருந்து தருவிக்கப்பட்டு கிராமம் கிராமமாக மாடுகளுக்கு ஏற்றப்படுகின்றது.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி உப அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மாடுகள் வளர்க்கும் பண்ணையாளர்கள் தங்கள் பகுதிக்கு தடுப்பு மருந்து ஏற்றும் நாள்களை பருத்தித்துறை கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்றும்

தடுப்பூசியை தவறாது போட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

## செப்ரிசிமியா; சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 03

செப்ரிசீமியாவின் தாக்கத்தினால் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

கல்வியங்காட்டைச்சேர்ந்த யோகராசா தினேஷா என்ற 10 வயதுச் சிறுமியே உயிரிழந்தவர் ஆவார். (இ-15)

## ''35 ஏ'', ''35 பி'' உணவு முத்திரை: 10 ஆம் திகதிக்கு முன் உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 3

இடம் பெயர்ந்தோருக்கான ''35ஏ'', ''35பி'' இலக்க உலர் உணவு முத்திரைக்கான நிவாரண விநியோகத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று செயலக புனர்வாழ்வுப் பிரிவு சகல ப. நோ. கூ. சங்கங்களையும் கேட்டுள்ளது,

ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கும் இம்மாதம் 14 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு மாத காலத்துக்கான நிவாரணத்தை வழங்குவதற்கான பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை— ''உ'' உலர் உணவு அட்டைக்கான பொருள்களும் விநியோகிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-2)

## ஓய்வூதியத் தாமதம் ஏன்?

ஓய்வூதியம் தாமதம் பற்றிய 31 - 07 – 96 ஆம் திகதிய உதயனின் ''வாசகர் திருமுகம்'' தொடர்பாக பின்வரும் தகவல்களைத் தருகின்றோம்.

ஓய்வூதியக் கொடுப்பனவுத் தாமதத்திற்கு யாழ். செயலகமோ, ஓய்வூதியக்கிளை உத்தியோகத்தர்களோ எவ்விதத்திலும் காரணம் இல்லை.

ஓய்வூதியத் தடங்கலுக்கான காரணங்கள் வருமாறு:-

★ கொழும்பில் 8 மணித்தியால மின்சாரத்தடை அமுலில் இருந்தமையால் கணணிச் செயற்பாடுகளில் ஏற்படும் தாமதம்.

★ அண்மைக் காலங்களில் கப்பல் மூலமான போக்குவரத்தும், விமானம் மூலமான சிவிலியன்களின் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டிருப்பதனால் ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் ஜூலை மாத ஓய்வூதிய வவுச்சர்களைக் கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

★ தற்சமயம் கிளாலி போக்குவரத்தும் முற்றாகத் தடைப்பட்டு இருத்தல் என்பனவாம்.

இவை போன்ற, செயலக கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களாலேயே ஓய்வூதியம் தாமதமாகின்றது என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ உதயன் 31 . 07 1996 ஆம் திகதி இதழில் ''வாசகர் திருமுகம்'' பகுதியில் வெளியான மடல்களுக்கு, யாழ். அரச அதிபரின் சார்பில் கணக்காளர் (ஓய்வூதியம்) அனுப்பி வைத்த விளக்கம் இதுவாகும்.

## மந்திகை ஆஸ்பத்திரியில் மின் விநியோகம் வெட்டு

### டீஸல் பற்றாக்குறை காரணம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் டீஸல் பற்றாக்குறையினால் பகல் வேளைகளில் மின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தினமும் காலை 6 மணி முதல் 8 மணிவரையும் —

பகல் 11 மணிமுதல் 12மணி வரையும்—

பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரையும் மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.

இவ்வைத்திய சாலையில் மூன்று ஜெனரேட்டர்கள் இருந்தபோதிலும் மின் விநியோகத்துக்குத் தேவையான எரி பொருள்களை வழங்கப் போதிய ஒதுக்கீடு இல்லை என பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் இவ்வைத்தியசாலையில் தங்கு தடையின்றி இரவு பகலாக மின் விநியோகம் இருந்து வந்தது. (இ-173)

# சீனி உட்பட பல பொருள்களுக்கு வலிகாமம் பகுதியில் தட்டுப்பாடு

நவாலி, ஓக. 3

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்குப் பகுதிகளில் சீனிக்கும் ஏனைய பல பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த 6 நாள்களாக யாழ். நகருக்குள் பொதுமக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் நகரிலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் இப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பகுதி வர்த்தக நிலையங்களில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் சில பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளது

தற்போது சில கடைகளில் ஒருவருக்கு கால் கிலோ சீனியும், சில இடங்களில் 100 கிறாம் சீனியும் வழங்கப்படுகின்றது.

மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சில கடைகளில் தெரிவிக்கப்படுகிறது.

## விஷ்ணு சிலையில் தங்கச் சங்கிலி திருட்டு

கொழும்பு, ஓக. 3

கொழும்பு கங்காராம விகாரையில் வைக்கப்பட்டுள்ள விஷ்ணு சிலையில் போடப்பட்டிருந்த 40 தங்கச் சங்கிலிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை களவாடப்பட்டுள்ளன. இதனுடைய பெறுமதி 2 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்: **10-08-1977**

விண்ணில்: **04-07-1996**

செல்வன்

### கதிர்காமநாதன் குலேந்திரன்

*(யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு கணிதப்பிரிவு 1996 ஆம் ஆண்டு மாணவன்)*

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எம் அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

04-07-1996 அன்று அகாலமரணமடைந்த எமது அன்புச் செல்வன் கதிர் குலேந்திரனை அவசர கிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற அரச அதிபர் திரு. செ. பத்மநாதனுக்கும் உதவிய ஏனையோர்க்கும் நன்றி செலுத்துவதோடு, 06-07-1996 அன்று நடைபெற்ற மரணச் சடங்கில் கலந்துகொண்ட யாழ் செயலக அதிகாரிகள், அலுவலர்கள், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (3-8-96) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

பெற்றோர்:
திரு. இ. கதிர்காமநாதன்
திருமதி சரோஜினிதேவி கதிர்காமநாதன்
சகோதரர்கள்:
பாலேந்திரன் (பாபு), ராஜேந்திரன் (ராஜு)
யோகேந்திரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

126/2, அரசடி வீதி,
யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக,
யாழ்ப்பாணம். (42094)

## 31ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

மலர்வு: **29 — 04 — 1976**



உதிர்வு: **04 — 07 — 1996**

### செல்வன் சுகந்தன் நவரட்ணசிங்கம்

*(மாணவன் யா/பரியோவான் கல்லூரி க. பொ. த. உயர்தர கணிதப் பிரிவு 1995)*

சுகந்தனே எம்மினிய நண்பா! உன்தன்
சுந்தரச் சிரிப்பினைக் காண்ப தெப்போ?
அகமகிழ வைக்கு முன் பேச்சின் ஆற்றல்
யாரையுமே விட்ட கன்று செல்லும் தானா!

அன்புடனே பழகுதற்கும்: உளம் திறந்து
ஆசையுடன் பேசுதற்கும்: யாரிங் குள்ளார்?
உன் உறுதி, உன் இனிமை, உன்தன் பாசம்
ஊக்கமுடன் பண்பிவற்றால் எமைக் கவர்ந்தாய்!

நிம்மதியாய் எமைவிட்டுச் சென்றாயோ நீ
நிம்மதியை நாமிழக்க வைத்தாயோ நீ
சம்மதியோம் நீபோக என்ற போதும்
சரித்திரத்தை எமன் முடித்தான் இனிய தோழா!

நீ படித்த பாடசாலை, உன்த னோடு
நெஞ்சு விட்டுப் பழகியநல் நண்பர். அன்பர்
யாவரையும் நீ மறக்க வைத்த அந்த
நமனுக்கு இருதயமே இல்லையோ தான்?

துணையாக நீயிருந்தாய் தோழ னானாய்!
துடிப்புடனே உதைபந்து ஆடி வென்றாய்
அணையாக நீநின்றாய் கல்லூ ரிக்கே
அழகூட்டினாய் எங்கள் உளம் நிறைந்தாய்!

பணியாக "இன்ரறக்ட்" கழகம் தன்னில்
பலர்போற்ற நீ சேவை புரிந்து நின்றாய்!
தணியாத சோகத்தில் எமை விடுத்தே
சார்ந்தாயோ இறைவனடி சாந்தி கொள்க.

**உனைத்தேடி அலைகின்ற உன் ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திக்கும் உன் உடன்பிறவா உயிர்கள்.**
(42088)

## வி. பி. கணேசன் காலமானார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் உப தலைவரும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவருமான வி. பி. கணேசன் சென்னையில் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் காலமானார். இறுதிச் சடங்கு கொழும்பில் திங்கட் கிழமை நடைபெறும். (இ-5)

## கேரதீவில் இனந்தெரியாத சடலங்கள்

தென்மராட்சி, ஒக. 3

கேரதீவுக் கடற்கரையில் கடந்த புதன்கிழமை மூன்று இனந்தெரியாத ஆண்களின் சடலங்கள் கரைஒதுங்கின.

அழுகிய நிலையில் காணப்பட்ட இந்தச் சடலங்கள் ஊர் மக்களால் கடற்கரையில் புதைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## செஞ்சிலுவைச் சங்க கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக் குழுவின் விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பட்டாஸ்மூடைமீது பஸ் ஏறியது 35 பேர் காயம்

சென்னை, ஒக. 3

தமிழ் நாடு புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பட்டாஸ் மூடை மீது பஸ் ஏறியதால் இடம்பெற்ற வெடி விபத்தில் 35 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை இச் சம்பவம் இடம்பெற்றது. (இ-5)

---

### கிளிநொச்சிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளையில் — சுமார் 12 சரக்கு ரயில் பெட்டிகளில் கொழும்பில் இருந்து வந்துள்ள அத்தியாவசிய ஆணையாளரின் உணவுப்பொருள்களும் அப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும்—

அங்கு உடனடியாக உணவுப் பொருள்கள் அனுப்பப்படாவிட்டால் மக்கள் பட்டினி கிடக்க, துன்பப்பட நேரிடும் என்றும் தொண்டர் நிறுவனங்களின் அலுவலர்கள் தெரிவித்தனர். (அ-3)

---

### புறக்கோட்டை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் தெரிவிக்கப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸாரைக் கொண்ட விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்று, புறக்கோட்டைப் பகுதியில் செவ்வாய்க் கிழமை இரவு தேடுதல் நடத்தி மேற்குறிப்பிட்ட 41 பேரையும் கைது செய்தது. (அ)

---

### இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற்பிராந்தியத்துக்குள் நுழைய இருந்ததுஎன்பதற்கான சான்றுகள் இருந்தன என்றும்—

கப்பலின் வருகை குறித்த தகவல் நேரகாலததுடன் வெளி வந்துள்ளதால் கப்பல் தற்போது இலங்கைக் கடற்பரப்புக்கு வெளியே சஞ்சரிப்பதாகவும் —

இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய பொருத்தமான வேளைக்காக அது காத்திருப்பதாகவும் "லங்கா தீப" பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. (இ-10)

## புலிகளைத் தடைசெய்வது அரசின் நோக்கம் அல்ல

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஒக. 3

விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யஅரசு தயாரில்லை என அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது பற்றி சட்டமா அதிபர் சரத் சில்வாவிடம் விசாரித்தபோது "விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகிப்போர் இந்நாட்டுப்பிரஜைகள். ஆனபடியால் அந்தஅமைப்பை இந்நாட்டில் தடைசெய்வதால் செயல்முறையில் எதுவித பயனேதும் ஏற்படாது" என்றார்.

வெளிநாட்டு அமைச்சில் இதுபற்றி விசாரித்தபோது "விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதாக அரசு தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை" என அந்த அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்படி 'திவயின' மேலும் தெரிவித்தது. (இ-10)

## இந்தியாவில் இருந்து 500 பஸ்கள்

கொழும்பு, ஒக. 3

போக்குவரத்து நெருக்கடியை போக்க. இந்தியாவில் இருந்து 500 பஸ்களை இறக்குமதி செய்ய அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டுள்ளதால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார். (இ-3)

## பாடசாலைக்கு புதிய எண்கள்

வலிகாமம்தெற்கு, ஒக. 3

பாடசாலைகளுக்குப் புதிய எண்கள் வழங்கப்படுவதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் போது புதிய எண்களைப் பயன்படுத்துமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (இ-152)


**புதிய உயர் கல்லூரி (யாழ்.)**
தற்போதைய சூழலால் சமுகம் தர முடியாத
**A/L 96, 97** மாணவர்கள்
**பிறைற்வே இன்ஸ்ரிரியூட்**
மூத்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டையில்
**03-08-96** 3 மணிக்கு சந்திக்கவும்.
நிர்வாகி:
S. அருள்நங்கை
(42099)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### கமலாதேவி குட்டிப்பிள்ளை

திருமதி கமலாதேவி குட்டிப்பிள்ளை 2-8-96 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வி செ குட்டிப்பிள்ளை (உடையார்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி தவமணிதேவி, இராஜகோபால், அசோகராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாதேவன், செல்வராணி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தயாளினி பாலச்சந்திரன், ரதினி, ரதுராம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிராமி, ஆதித்யாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. இராஜகோபால்
(மகன்)

643, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (42103)

### திருமதி தங்கம்மா வீரசிங்கம்

உரும்பராய் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தங்கம்மா வீரசிங்கம் 01-08-96 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற யோகநாதன், ரதிதேவி, ரதிக்குமாரி, நவபாலன் (கனடா), ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி (குவைத்). தவராஜா, சண்முகநாதன், சாந்தா (கனடா), சற்குணதேவி (கனடா) ஆகியோரின் மாமியாரும், பிரதீபன் (கனடா), நேருஜா (கனடா), அனித்தா, ஜெனித்தா, நிரோஜன், சிந்துஜன், சாருஜன். சயந்தன் (கனடா), நேமியா, டக்சன், டிக்சன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (02-08-96) நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. சண்முகநாதன்
(மருமகன்)

சிவன் வீதி,
உரும்பராய் மேற்கு,
கோண்டாவில்.
அன்னுங்கை. (42098)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 03-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.